**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI**
**OS No.220/2019**

பெயர் : லெட்சுமி (PW3) கிராமம் :

தந்தை / கணவர் பெயர் : தொழில் :

வயது :

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. முதல் விசாரணைக்கான நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை வழக்கறிஞருக்கு யார் தகவல் தெரிவித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. எனக்கு படிக்கத் தெரியாது என்பதால் அதில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது.

2. 3ம் பிரதிவாதி எனக்கு உறவினர். அவர் சாயல்குடியில் ஜெராக்ஸ் கடை வைத்துள்ளார். கடையை பெரிதுபடுத்த வங்கியில் கடன் பெற்றார் என்றால் சரியல்ல. எனது மகனை பார்ட்னராக சேர்க்க லோன் வாங்க வேண்டும் என்று கேட்டார்.

3. நானோ, எனது கணவரோ, எனது மகனோ ஸ்ரீராம் பினான்ஸில் லோன் கேட்கவில்லை. ஸ்ரீராம் பினான்ஸ் மேலாளர் வீட்டில் வந்து கையெழுத்து வாங்கிச் சென்றார். ஸ்ரீராம் பினான்ஸில் இருந்து 3ம் பிரதிவாதிக்கு 8 இலட்சம் ரூபாய் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் மேற்படி விபரங்களை தெரிந்து கொண்டு வழக்கிலிருந்து தப்பிக்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி லோன் பெறுவதற்கு நானும், 1ம் வாதியும் கேரண்டராக கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனடிப்படையில்

நாங்கள் இருவரும் மேற்படி கடன் தொகையை திரும்ப செலுத்த கடமைப்பெற்றவர் என்றால் சரியல்ல.

4. சாட்சி கையொப்பம் நான் செய்யவில்லை. எனது கணவரோ, மகனோ செய்யவில்லை. லோன் தொகை ரூ.8,00,000/–ல் பாதி தொகையான ரூ.4,00,000/–யை எங்களுக்கு தருவதாக 3ம் பிரதிவாதி கூறியதாக நான் தாக்கல் செய்த நிரூபண பிரமான வாக்குமூலத்திலும், பிராதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி கார்த்திகேயன் இவ்வழக்கில் ஆஜராகவில்லை என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது.

5. 1ம் பிரதிவாதியின் நிறுவத்தில் 3ம் பிரதிவாதிதான் லோன் பெறுவதற்கு ஆவணம் தாக்கல் செய்ததால் அவருக்கு ரூ.8,00,000/– கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் நிறுவனம் எந்த தொகையும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

6. 3ம் பிரதிவாதி எங்களுக்கு பணம் கொடுக்காததற்கு காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை. 3ம் பிரதிவாதி 1, 2ம் பிரதிவாதிகளிடம் பெற்ற கடன் தொகையை செலுத்த கடமைப் பெற்றவர் என்றால் சரியல்ல.

7. நானும், எனது கணவரும் 3ம் பிரதிவாதியுடன் கூட்டு சேர்ந்து கொண்டு 3ம் பிரதிவாதி பெற்ற கடனை திரும்ப செலுத்தாமல் தப்பிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)